**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in


பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 16.12.2024

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் மரபணுத்தொகை அடிப்படையில் பயிர்பெருக்கம் பற்றிய இரண்டுநாள் நேரடி பயிற்சி

தமிழ்நாடு வேளாண்மைப்பல்கலைக்கழகத்தின் தாவரமூலக்கூறு உயிரியல் மற்றும் உயிரித்தொழில்நுட்பமையத்தின் தாவர உயிரித்தொழில்நுட்பத்துறையில் 2024 டிசம்பர் 16 மற்றும் 17 ஆகிய இரண்டு நாட்கள் "மரபணுத்தொகை அடிப்படையில் பயிர்பெருக்கம்"என்ற தலைப்பில் இரண்டு நாள் பயிற்சித் திட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கேரளா வேளாண்மைப் பல்கலைக்கழகம், எஸ் ஆர் எம் பல்கலைக் கழகம், அம்ரிதா பல்கலைக்கழகம், குமரகுரு வேளாண்மை கல்லூரி, ஜெஎஸ்ஏ வேளாண்மை கல்லூரி மற்றும் பல நிறுவனங்களில் இருந்து உதவி பேராசிரியர்கள், ஆராய்ச்சியாளர்கள், பிஎச்.டி, எம்.எஸ்சி மற்றும் பி. எஸ். சி. மாணவர்கள் மொத்தம் 14 பேர் கலந்து கொண்டனர். பயிற்சி நிகழ்ச்சியை தாவரமூலக்கூறு உயிரியல் மற்றும் உயிரித்தொழல்நுட்பமையத்தின் இயக்குனர் முனைவர் என். செந்தில் துவக்கி வைத்தார். தாவர மூலக்கூறு உயிரியல் மற்றும் உயிர்தகவலியல் துறை பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் எல். அருள் வரவேற்றார். தாவர இனப்பெருக்கம் மற்றும் மரபியல் மையத்தின் இயக்குனர் முனைவர் ஆர். ரவிகேசவன் சிறப்புரையாற்றினார். இந்த இரண்டு நாள் பயிற்சித் திட்டத்தில், பயிர்மேம்பாட்டிற்காக மரபணுத்தொகை உதவி இனப்பெருக்கம் குறித்து

வல்லுநர்களால் தொடர்ச்சியான விரிவுரைகள் வழங்கப்படுகின்றன. PCR நுட்பங்கள், மரபணு வகை சோதனைகள் ஆகியவற்றில் பயிற்சி அளிக்கப்படுகிறது. பங்கேற்பாளர்களுக்கு QTL மேப்பிங்கிற்கான ICIM மற்றும் GWAS க்கான TASSEL மற்றும் 3Kநெல் பேனலில் ஹாப்லோடைப் பகுப்பாய்வு போன்ற மென்பொருள்கள் குறித்தும் பயிற்சி அளிக்கப்படுகிறது. உதவிப் பேராசிரியர் முனைவர் வே. ராஜன்பாபு மற்றும் இணைப் பேராசிரியை எஸ். கீதாஞ்சலி ஆகியோர் நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தனர்.

***மக்கள் தொடர்பு அலுவலர்***